முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.149/2023**

**(LW -1) (PW - 1)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூபாலன் | மதம் | |
| த.பெ. | சாம்பசிவம் | தொழில் | |
| ஊர் | கோண்டூர் | வயது | 71 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 09,10,2025 |

இன்று (09.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் 1, 2 ஆஜரில்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் கோண்டூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். 2004 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ம் தேதி இரவு நான் சாப்பிட்டுவிட்டு படுத்தவுடன் நள்ளிரவில் ராத்திரி நேரத்தில் படுக்கை அறையில் படுத்திருந்தேன் . எனது மனைவி மகள் ஆலில் படுத்திருந்தார்கள் . எனது மனைவியும் மகளும் கத்தும் சத்தம் கேட்டு நான் எழுந்தேன். யார் என்று கேட்டவுடன் அந்த நபர் என்னை தலையில் ராடால் அடித்துவிட்டார். மொத்தம் 3 பேர் இருந்தார்கள். முதலில் ஒருத்தன் தான் வந்தான் அதன் பிறகு 2 பேர் வந்தார்கள். அந்த ராடால் பீரோவை வளைத்தார்கள் என்னை ராடால் அடித்ததால் சிறிதுமயக்கமாகிவிட்டது எழுந்த பிறகு பார்த்த போது பீரோவில் இருந்த 3 ஜோடி கம்மல் 2 செயின் 1 செட் வளையல் வள்ளி கால் கொலுசு 500 ரூபாய் பணம் ஆகியவைகள் களவு போயிருந்தது . அதை எடுத்துக்கொண்டு அந்த நபர்கள தோட்டத்து பக்கம ஓடி விட்டார்கள். சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து விசாரித்து போலிசுக்கு போன் செய்தார்கள் . நான் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு வந்து விட்டேன் . போலிசார் மருத்துவமனைக்கு வந்தார்கள் அவர்களுடன் சென்றேன் என்னுடன் வந்தவர் பரமன் என்பவர் நான் சொல்ல புகாரை எழுதினார் அதை நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் . தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கையெழுத்திட்டு கொடுத்த புகார் அந்த புகார் **அ.த.சா.ஆ 1**. தனிப்படை போலிசார் என்னை கடலூர் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள் அடையாள அணிவகுப்பு நடத்தினார்கள். நான் எனது வீட்டிற்கு வந்த நபர்களை அடையாளம் காட்டினேன். தற்போதும் என்னால் எதிரிகளை அடையாளம் காட்ட முடியும்.

( எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லாததால் எதிரிகளை அடையாள்ம் காட்ட வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Principal Subordinate Judge,
Villupuram